# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.07.08 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டகோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 43.50** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 82 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பொதுவான விதிவிலக்குகளின் நோக்கெல்லையிலிருந்து 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட வேண்டுமென முன்மொழியப்பட்ட திருத்தத்தை நீக்குவதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், “வேண்டுமென்றே” எனும் சொல்லுக்குப் பதிலாக “உளக்கருத்துடன்” எனும் சொல்லை இடுவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 308 அ என்னும் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 308ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பிள்ளைகள் மீதான கொடூரமானதும் இழிவானதுமான உடல்ரீதியான அல்லது உடல்ரீதியிலல்லாத தண்டனைகளைத் தடுப்பதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 314அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பிள்ளையொன்றுக்கு எதிராக தன்னிச்சையாகக் காயம் விளைத்தற் தவறு புரியப்படுமிடத்து அதற்கான அதிகரித்த தண்டத்தை அறிமுகப்படுத்துவதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 316அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பிள்ளையொன்றுக்கு எதிராக தன்னிச்சையாகக் கடுங்காயம் விளைத்தற் தவறு புரியப்படுமிடத்து அதற்கான அதிகரித்த தண்டத்தை அறிமுகப்படுத்துவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் அது 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையுமாகும்.

ச.வ.– ஓ 41/2024

## (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டகோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 82 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான எடுத்துக்காட்டுக்கு உடன்முன்னர் பின்வருவதனை உட் புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

19 ஆம் அத்தியாயத்தின் 82 ஆம் பிரிவைத் திருத்துதல்

> “***ஐந்தாவதாக -*** இவ்விதிவிலக்கானது பிள்ளைகள் தொடர்பில் சரீர தண்டனையை விதிப்பதற்கு விரிவுபடுவதாகாது.”.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 308அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் “வேண்டுமென்றே” எனும் சொல்லுக்குப் பதிலாக “உளக்கருத்துடன்” எனும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 308அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 308அ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 308ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 308ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

“பிள்ளைகள் தொடர்பான சரீரத் தண்டனை

**308ஆ.**(1)(அ) தண்டனை வழிமுறையொன்றாக அல்லது திருத்த முறையாக, உடல்சார் வலோற்காரம் பயன்படுத்தப்படும் செயலொன்றை, அத்தகைய செயல், சிறிதளவானதாகவிருப்பினும் ஏதேனும் அளவினதான வலியை அல்லது அசௌகரியத்தை விளை

விக்கும் சாத்தியம் கொண்ட தாகவிருக்குமென அறிந்து கொண்டு; அல்லது

(ஆ) உடல் ரீதியிலல்லாத செயலொன்றை, சிறிதள வானதாகவிருப்பினும் அது இழிவுபடுத்துதலை விளைவிக்கும் சாத்தியம் கொண்டதாகவிருக்குமென அறிந்து கொண்டு,

பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரேனு மாளின் கட்டுக்காப்பை, பொறுப்பை அல்லது பராமரிப்பைக் கொண்டுள்ள எவரும் புரிந்தால், அவர் சரீரத் தண்டனை என்ற தவறைப் புரிகின்றார்.

(2) பிள்ளைகள் தொடர்பில் சரீரத் தண்டனைத் தவறைப் புரிகின்ற எவரும், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனையினால் அல்லது ஒரு இலட்சம் ரூபா வரை நீடிக்கப்படக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது மேற்படி இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எவ்வாள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அவ்வாளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையினால் கோப்பிடப்பட்ட, பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக் கூற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தொகையொன்றிலான நட்ட ஈட்டைச் செலுத்தும் படி கட்டளையிடவும்படலாம்.

(3) (அ) அரச அதிகாரசபையொன்றின் அல்லது பயிற்சிப் பாடசாலையொன்றின், பாடசாலை விடுதியொன்றின், சிறுவர் இல்லமொன்றின் அல்லது பகல்நேர பராமரிப்பு நிலையமொன்றின் கட்டுக்காப்பிலுள்ள பதினெட்டு வயதிற்குக் குறைந்த பிள்ளை தொடர்பில்; அல்லது

(ஆ) உடல்ரீதியான அல்லது உளரீதியான இயலாமையிலுள்ள பதினெட்டு வயதிற்குக் குறைந்த பிள்ளை தொடர்பில்,

சரீரத் தண்டனைத் தவறைப் புரிகின்ற எவரும், ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கான மறியற்றண்டனையினால் அல்லது ஒரு இலட்சம் ரூபா வரை நீடிக்கப்படக் கூடிய குற்றப்பணத்தினால் அல்லது மேற்படி இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எவ்வாள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அவ்வாளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சி களுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையினால் கோப்பிடப்பட்ட, பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக் கூற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தொகையொன்றிலான நட்டஈட்டைச் செலுத்தும்படி கட்டளையிடவும்படலாம்:

ஆயின், தவறாளர் பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவராக இருக்குமிடத்து, நீதிமன்றம் ஆறு மாதங்களைவிடக் குறைவானதொரு காலத்திற்கான மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்கலாம்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “அரச அதிகாரசபையொன்றின்கீழான கட்டுக்காப்பு” என்பது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கருத்தெல்லையினுள் வருகின்ற ஏதேனும் கட்டுக்காப்பு எனப் பொருள்படும்.

எடுத்துக்காட்டுகள்

(அ) "பி" என்பவரின் பிள்ளையாக இருக்கின்ற "ஏ" என்பவர், பரீட்சையொன்றுக்காகக் கற்கும்படி "பி" என்பவர் பிறப்பிக்கும் கட்டளையைக் கடைபிடிக்க மறுகின்றார். அதற்கான தண்டனையாக "பி" என்பவர் "ஏ" என்பவரை பட்டியொன்றால் அடிக் கின்றார். இச்செயல் காரணமாக "ஏ" என்பவர் உடல்ரீதியான ஊறுகளை அடைகின்றார். "பி" என்பவர் சரீரத் தண்டனைத் தவறைப் புரிந்துள்ளார்.

(ஆ) சிறுவர் இல்லமொன்றின் பரா மரிப்பாளரான "ஏ" என்பவர், அந்நிறுவனத்திலுள்ள பிள்ளை யொருவரான "பி" என்பவர் வேறொரு பிள்ளைக்கு கொடுஞ்செயல் புரிவதை அவதானிக்கின்றார். அதற்கான தண்டனையாக "ஏ" என்பவர் "பி" என்பவருக்கு பல மணித்தியாலங்கள் உணவளிக்காமல் இருக்கின்றார். "ஏ" என்பவர் சரீரத் தண்டனைத் தவறைப் புரிந்துள்ளார்.

(இ) ஆசிரியரொருவராக அல்லது அதிபரொரு வராக இருக்கும் "ஏ" என்பவர், "பி" என்னும் பிள்ளை வேறொரு பிள்ளையின் ஆதனத்தைக் களவாடியுள்ளதென நம்பி, "பி" என்னும் பிள்ளையை பாடசாலை மாணவர் ஒன்றுகூடல் மேடைக்கு அழைத்து மாணவர்களுக்கு முன்னிலையில் "பி" என்பவர் ஒரு திருடன் என வெளிப்படுத்துவதன்மூலம் "பி" என்பவரை இழிவுபடுத்துகின்றார்.

"ஏ" என்பவர், சரீரத் தண்டனைத் தவறொன்றைப் புரிந்துள்ளார்.

(ஈ) 16 வயதுடைய மாணவத் தலைவரான "ஏ" என்பவர், மாணவர்களின் ஆடை அலங்காரங்களை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பில் பாடசாலை அதிபரினால் அமர்த்தப்படுகின்றார். "பி" என்னும் மாணவன் பாடசாலை ஆடை அலங்காரத்தை மீறும் வகையில் ஆடையொன்றை அணிந்திருப்பதை "ஏ" என்பவர் கண்டுபிடிக்கின்றார். "ஏ" என்பவர் "பி" என்பவருக்கு அறைகின்றார், ஆனாலும் உடல்ரீதியான ஊறுகள் எவையும் ஏற்படவில்லை. "ஏ" என்பவர் சரீரத் தண்டனைத் தவறொன்றைப் புரிந்துள்ளார்.".

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 314 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத் தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 314அ என்னும் பிரிவாகப் பயறுதலும் வேண்டும்:-

"பிள்ளைகளுக்கு தன்னிச்சையாகக் காயம் விளைத் ததற்கான தண்டனை

**314அ.** முந்நூற்றிருபத்தைந்தாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவருக்கு தன்னிச்சையாகக் காயம் விளைக்கின்ற எவரும், இரண்டாண்டுகள் வரை நீடிக்கக் கூடியதான காலப்பகுதியொன்றுக் கான இருவகையிலொருவகை மறி யற்றண்டனையினால் அல்லது ஐந்து இலட்சம் ரூபா வரை நீடிக்கக்கூடிய குற்றப்பணத்தினால் அல்லது மேற்படி இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எவ்வாள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அவ்வாளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப்

பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையினால் கோப்பிடப்பட்ட, பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக் கூற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தொகையொன்றிலான நட்டஈட்டைச் செலுத்தும்படி கட்டளையிடவும்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 316அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 316 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்ட வாக்கத்தின் 316அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பிள்ளைகளுக்கு தன்னிச்சையாகக் கடுங்காயம் விளைத்ததற்கான தண்டனை

**316அ.** முந்நூற்றிருபத்தாறாம் பிரிவினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள சந்தர்ப்பத்திற்றவிர, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவருக்கு தன்னிச்சையாகக் கடுங்காயம் விளைக்கின்ற எவரும், பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய வொரு காலத்திற்கான இருவகை யிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றப்பணமொன்றுக்கும் பொறுப்பாதலும் வேண்டும்; அத்துடன் எவ்வாள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அவ்வாளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப் பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சி களினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினால் கோப்பிடப்பட்ட, பலியாக்கப்பட்டவர் பற்றிய தாக்கக்

> கூற்றைக் கவனத்துட் கொண்ட பின்னர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தொகையொன்றிலான நட்டஈட்டைச் செலுத்தும்படி கட்டளையிடவும்படலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 341 ஆம் பிரிவினைத் திருத்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 341 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான எடுத்துக்காட்டின் (i) ஆம் பந்தியை நீக்கி விடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.